**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 2, Issue - 2, May 2023 E-ISSN: 2583-0481

# Arts in *Kurunthogai*

**S. Vevoka,** Researcher, Department of Hindu Civilization, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
ORCiD: https://orcid.org/0009-0004-9890-4098
**Dr. (Mrs) S. Kesavan,** Head & Hindu Civilization, Senior Lecturer Gr-1,
Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka
ORCiD: https://orcid.org/0000-0001-9959-6219
**DOI: 10.5281/zenodo.7981647**
**Received** 17 March 2023; **Revised form** 11 April 2023; **Accepted** 27 April 2023; **Available online** 26 May 2023.

## Abstract

*The Sangam literature is known as Patinen literature (18). These are divided into two major categories based on other things like the composition of songs, number of lines, and composition of verses such as octet literature and ten-song literature. Out of them, "Kurunthogai" is considered one of the literature. It can be seen that the songs in the collection refer to inner life. Characters such as Thalaivan, Thalavi, Thozhi, Sevizhithai, Pangan, etc. are part of it. Also, the historical notes about emperors like Cholan Karikavalavan, Kuttuvan, Tinther Porayan, and Pasumpoon Pandyan and minor emperors like Pari, Ori, Nalli, and Nannan, the gift they gave and their country's excellence are highlighted. This article is a study about where and how arts are mentioned in the "Kurunthogai" and also highlights the aspects of love, togetherness, fulfillment, separation, mourning, indwelling, existence and which arts are available.*

**Keywords:** Sangam Literature, *"Kurunthogai"*, Arts.

## References

[1] Nagarasan, V. *Kurunthogai*. New Century Books, Chennai, 2004.
[2] Balasubramanian, G.V. *Sangha Ilakkiathil Kalaium Kalaikkotpatum*. New Century Bookhouse, Chennai, 2016.
[3] Kesavan, S. *Hindu Samaya Nerikalum Kovil Kalaikalum*. Batticaloa District Writers Association, District Secretariat (Concert), Batticaloa.
[4] Kesavan, S. *Hindu Nagarigam or Arimugam*. Kumaran Book House, Colombo, Chennai, 2021.
[5] Manikandan, P. *Nalla Kurunthogai*. Assistant Professor, Hindustan College of Arts and Sciences, Coimbatore-28.
[6] London Swaminathan, Research Paper No – 1449, Dated – 1.12.2014.
[7] www.blogerspot.com . Radhakrishnan.T.V, time – 06:23 pm.
[8] www.nallakurunthokai.blogersport.com . Prabhakaran, time – 01:26 pm.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

## குறுந்தொகையில் கலைகள்

மலர் - 2, இதழ் - 2, வைகாசி 2054 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

**செ. வெவோகா,** ஆய்வாளர், இந்துநாகரிகத்துறை,
கலைகலாசாரப் பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
**ORCiD: https://orcid.org/0009-0004-9890-4098**
**கலாநிதி. திருமதி. எஸ். கேசவன்,** தலைவர் & சிரேஷ்ட விரிவுரையாளர், இந்துநாகரிகத் துறை,
கலை கலாசாரப் பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
**ORCiD: https://orcid.org/0000-0001-9959-6219**
**DOI: 10.5281/zenodo.7981647**

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்க இலக்கியங்கள் பதிணென் மேற்கணக்கு இலக்கியங்கள் என அழைக்கப்படுகின்றன. இவை எட்டுத்தொகை இலக்கியங்கள், பத்துப்பாட்டு இலக்கியங்கள் என பாடல்களின் அமைப்பு, வரிகளின் எண்ணிக்கை, பாவமைப்பு என இன்னோரன்ன விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இரு பெரும் பிரிவாக வகுக்கப்படுகின்றன. அவற்றில் எட்டுத்தொகை இலக்கியங்களில் ஒன்றாகவே குறுந்தொகையானது விளங்குகின்றது. குறுந்தொகையில் உள்ள பாடல்கள் அகவாழ்க்கை தொடர்பாகவே குறிப்பிடுகின்றதனைக் காணலாம். தலைவன், தலைவி, தோழி, செவிழித்தாய், பாங்கன் போன்ற கதாப்பாத்திரங்களே அங்கம்வகிக்கின்றன. அத்துடன் சோழன் கரிகால்வளவன், குட்டுவன், திண்தேர்ப் பொறையன், பசும்பூண் பாண்டியன் போன்ற பேரரசர்கள் மற்றும் பாரி, ஓரி, நள்ளி, நன்னன் போன்ற சிற்றரசர்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள், அவர்கள் வழங்கிய கொடை, அவர்களது நாட்டுச் சிறப்பு என்பன எடுத்துரைக்கப் பெறுகின்றன. களவொழுக்கம், காதல், உடன்போக்கு, புணர்தல், பிரிதல், இரங்கல், ஊடல், இருத்தல் எனும் அம்சங்களையே எடுத்துரைக்கின்ற குறுந்தொகையில் கலைகள் பற்றி எங்கு எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும் எந்தக் கலைகள் பற்றிய செய்திகள் கிடைக்கப்பெறுகின்றன தொடர்பாகவும் ஆய்வதாக இக்கட்டுரை அமையப் பெற்றுள்ளது.*

**குறிப்புச் சொற்கள்:** சங்க இலக்கியம், குறுந்தொகை, கலைகள்.

**அறிமுகம்**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே வளமும் புகழும் பெற்றிருந்த நகரங்கள். வறியோர்க்கு உதவி செய்து புகழ் பெற்ற வள்ளல்களின் பெயர்கள், ஆற்றலிற் சிறந்த அரசர்களின் பெயர்கள் ஆகியவைகளையும் இந்நூலிலே காணலாம். பண்டைத் தமிழர்களின் வாழ்க்கைச் சிறப்பையும் சில சரித்திரக் குறிப்புக்களையும் தெரிந்துகொள்ள இந்நூல் பெரிதும் துணை செய்யும். சங்க இலக்கியங்கள் என்று போற்றப்படுவது எட்டுத்தொகையும் பத்துப்பாட்டுமாகும் இவ்விலக்கிய நூல்கள் பழந்தமிழரின் நற்பண்புகளையும் சமூக வாழ்வியலையும் எடுத்தியம்புகிறது. மொழிக்கு இலக்கணம் வகுத்த நம் முன்னோர்கள் மனிதன்

எவ்வாறு வாழவேண்டும் என்று வாழ்வியல் நெறியை வகுத்து செம்மையாக வாழ்ந்துள்ளமையை சங்கத்தமிழ் நூல்கள் மூலம் அறியமுடிகிறது.

குறுந்தொகை எட்டுத்தொகையில் உள்ள நூல்களுள் ஒன்று. இந்நூல் எட்டுத்தொகை நூல்களைத் தொகுத்துச் சுட்டும் பழம்பாடலில் **"நல்ல குறுந்தொகை"** எனச் சிறப்பித்து உரைக்கப்படுகிறது. **(மணிகண்டன். ப)** இந்நூல் குறைந்த அடிகள் கொண்ட பாடல்களின் தொகுப்பாக இருப்பதால் குறுந்தொகை எனப் பெயர் பெற்றது. ஏனைய பழந்தமிழ் நூல்களைப் போல் இதுவும் 400 பாடல்களின் தொகுப்பாகவே இருந்திருக்க வேண்டுமென்றும் ஒரு பாடல் இடைச்செருகலாக இருக்கக்கூடுமென்றும் சிலர் கருதுகிறார்கள். **(லண்டன் சுவாமிநாதன்)**

உரையாசிரியர்கள் பலராலும் அதிகமாக அதாவது 235 பாடல்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. **(இராதாகிருஷ்ணன். T. V)** ஆதலால் இந்நூலே முதலில் தொகுக்கப்பட்ட தொகை நூலாகக் கருதப்படுகிறது. இது பலவகையிலும் நற்றிணை, அகநாநூறு ஆகிய பாடல் தொகுப்புகளை ஒத்தது. இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ எனினும் தொகுப்பித்தவர் பெயர் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இத்தொகுப்பில் அமைந்துள்ள 401 பாடல்களை 206 புலவர்கள் பாடியுள்ளனர். **(பிரபாகரன்)** இந்நூலில் அமைந்துள்ள 10 பாடல்களுக்கு ஆசிரியர் பெயர் தெரியவில்லை. ஆனால் அப்பாடல்களின் சிறப்பு நோக்கி அதில் அமைந்த சிறப்புத் தொடர்களையே ஆசிரியர் பெயர்களாக அமைத்து வழங்கினர். அவர்களில் **'அணிலாடு முன்றிலார்"** (குறுந். பா. 41), **'செம்புலப்பெயல் நீரார்"** (குறுந். பா. 40), **'குப்பைக் கோழியார்"** (குறுந்.பா.305), **'காக்கைப் பாடினியார்"** (குறுந்.பா.210), **'விட்ட குதிரையார்"** (குறுந். பா. 74), **'மீனெறி தூண்டிலார்"** (குறுந்.பா.54), **'ஓரேருழவனார்"** (குறுந். பா. 131.), **'காலெறி கடிகையார்"** (குறுந். பா.267), **"கல்பொரு சிறுநுரையார்"** (குறுந். பா. 290), முதலானோர் உவமைச் சிறப்பால் பெயர் பெற்ற ஆசிரியர்கள் 18 பேர் இந்நூலில் காணப்படுகிறார்கள். கடவுள் வாழ்த்து பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.

குறுந்தொகை நான்கு முதல் எட்டு வரையான (307, 391 - ஆம் பாடல்கள் 9 அடிகளால் ஆனது) அடிகளைக் கொண்டமைந்த 401 பாடல்களின் தொகுப்பு ஆகும். இந்நூல் அகப்பொருள்களை அகவற்பாக்களால் கூறுகின்ற போதும் முதற்பொருள் மற்றும் கருப்பொருட்களை விட உரிப்பொருளுக்கே சிறப்பிடம் தந்துள்ளது. இதில் வருணனைகள் குறைந்தும் உணர்வு மிகுந்தும் காணப்படுகின்றன. **(லண்டன் சுவாமிநாதன்)** பொருளுக்கேற்ற பொருத்தமான உவமைகள் கொண்டு கருப்பொருளின் பின்னணியில் மாந்தர்களின் அகத்தெழும் உணர்ச்சிகளைச் சிறந்த முறையில் சித்தரித்துக் காட்டுபவை குறுந்தொகைப் பாடல்களாகும். இந்த நூலின் முதல் 380 பாடல்களுக்குப் **'பேராசிரியர்'** உரை எழுதியுள்ளார். பேராசிரியர் உரை எழுதாத அடுத்த 20 பாடல்களுக்கு **'நச்சினார்க்கினியர்'** உரை எழுதிச் சேர்த்துள்ளார். நச்சினார்க்கினியர் தாம் எழுதிய தொல்காப்பிய உரையில் (அகத்திணையியல்

நூற்பா 46) பேராசிரியரின் குறுந்தொகை உரையை மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார். **(மணிகண்டன்.ப)** இந்த இரண்டு உரைகளும் இன்று கிடைக்கவில்லை.

குறுந்தொகைப் பாடல்களில் சோழன் **கரிகால்வளவன், குட்டுவன், திண்தேர்ப் பொறையன், பசும்பூண் பாண்டியன்** போன்ற பேரரசர்கள் மற்றும் **பாரி, ஓரி, நள்ளி, நன்னன்** போன்ற சிற்றரசர்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் இடம் பெறுகின்றன. **"கொங்குதேர் வாழ்க்கை"** என்ற இரண்டாம் பாடல் இறையனார் பாடி, தருமி என்ற புலவருக்குப் **"பொற்கிழி"** வழங்கச் செய்தது சிறந்த வரலாற்றுச் சான்றாகும்.

**நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆரளவின்றே சாரல்**
**கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தெனிழைக்கும் நாடனோடு நட்பே (குறுந்., பா. 3)**

என்ற பாடல் தலைவனின் அன்பின் ஆழத்தையும் தலைவியின் நம்பிக்கையையும் எடுத்துரைக்கிறது. **"வினையே ஆடவர்க்கு உயிரே"** என்ற தொடர் ஆண்களின் கடமையைக் கூறுகிறது. இவற்றினூடாக குறுந்தொகை இலக்கியமானது அகவாழ்வு பற்றியும் தலைவனது பெருமைகள், நாட்டு, நகர வர்ணனைகள் என்பவற்றையும் சிறப்பாக எடுத்துரைப்பதனைக் காணலாம்.

குறுந்தொகை இலக்கியமானது ஒவ்வொரு திணை நிலத்திற்கு உரிய ஒவ்வொரு ஒழுக்கத்தினையும் அவர்களது உடன்போக்குக்களையும் பின்வருமாறு எடுத்துரைக்கின்றன. அதாவது, குறிஞ்சித் திணை – புணர்தலும் புணர்தல் நிமித்தமும், முல்லைத் திணை – இருத்தலும் இருத்தல் நிமித்தமும், மருதத் திணை – ஊடலும் ஊடல் நிமித்தமும், நெய்தற் திணை – இரங்கலும் இரங்கல் நிமித்தமும், பாலைத் திணை – பிரிதலும் பிரிதல் நிமித்தமும் என்பனவாம். குறுந்தொகையில் திணைவாரியாகப் குறிஞ்சி – 145 பாடல்கள், முல்லை – 45 பாடல்கள், மருதம் – 50 பாடல்கள், நெய்தல் – 71 பாடல்கள், பாலை – 90 பாடல்கள் உள்ளன. குறுந்தொகை பாடல்களில் தலைவன், தலைவி, தோழி, செவிலி, கண்டோர், பாங்கன், பரத்தை எனும் ஏழுவகை மாந்தர்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளனர். இங்கு காஞ்சி, மாத்தை, உறையூர், குறும்பூர் முதலிய ஊர்கள் இடம்பெற்றுள்ளன. இசைக்கருவிகளாக, பறை, பணிலம், பதலை, முழவு, முரசு, தட்டப்பறை, குளிர் முதலியன பயன்படுத்தப்பட்டுள்ளன. சுவடிகளில் எழுதப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வந்த இந்நூல் பிற்காலத்தில் அழிந்துபோகும் நிலை எய்தியபோது, பல சுவடிகளைச் சோதித்து முதன்முதலில் திருக்கண்ணபுரத்தைச் சேர்ந்த திருமாளிகைச் சௌரிப் பெருமாளரங்கன், தான் இயற்றிய புத்துரையுடன் 1915 ஆம் ஆண்டு பதிப்பித்து வெளியிட்டார். இதன் பின்னர் வேறு பலரும் வெளியிட்டுள்ளனர். எக்கலையானாலும் அதற்குரிய கலைப் பின்புலம் (கலை பற்றிய அறிவு, அழகியல் பார்வை), செய்திறன், சமூகப் பயன்பாடு என்பன இருக்கும். எனினும் இது தான் கலை என்றும், இது

கலை அல்ல என்றும் எச்செயற்பாட்டையும் அறுதியிட்டுச் சொல்ல முடியாது. மேலும் கலை சமூகம் சார்ந்ததாகவும் இருக்கின்றது. அதாவது, பொருள் படைத்தவர்கள் கலை, பொதுமக்கள் கலை, அல்லது இன அடிப்படையிலான கலை என பல சமூகத் தாக்கங்களும் கலைக்கு உண்டு. எனவே கலை பல நிலைகளிலும், பல்வேறு தளங்களிலும் ஆராயப்படவேண்டிய ஒன்று. மனித திறன், ஆற்றல், கற்பனை வளத்தின் முகவாண்மையாக கலை விளங்குகிறது. அந்தவகையில் குறுந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ள கலைகள் தொடர்பான விடையங்களை நோக்கின்,

**கலை பற்றிய குறிப்புக்கள்**

ஒரு சமுதாயத்தில் உள்ள மக்கள் தொன்றுதொட்டு செய்யும் செயல்களை பழக்கவழக்கம் எனலாம். அப் பழக்கவழக்கங்களினுள் கலைகளும் பொதிந்து வளர்ந்துள்ளதனைக் காணலாம்.

**நடனக்கலை (ஆடல் கலை)**

வெறியாட்டம் சங்ககால மக்கள் வாழ்வில் முக்கிய இடம் பெறுகின்றன. ஐங்குறு நூறு, குறுந்தொகை, அகநாநூறு போன்றவற்றில் வெறியாடல் பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெறுகின்றன. இவ் வெறியாட்டத்தில் பூசாரிகள் இல்லை. இறைவன் தம்மிலே வந்து வெளிப்படுவான் என்று நம்பிக்கையில் ஆடினர். ஆடுபவர் கையில் வேலைக் கொண்டு ஈடுவதனால் வேலன் எனப்பட்டனர். **(இந்து நாகரிகம் ஓர் அறிமுகம், பக். 50)** இவ்வாட்டத்தில் ஆட்டைக் கழுத்தை வெட்டி சிறிய திணை அரிசியை பூக்களோடு சேர்த்து தூவி வழிபடுவர் எனவும், ஆட்டுக்குட்டியை நோயுள்ள பெண்ணின் நெற்றியில் தடவி முருகக் கடவுளை வணங்கி பலியிடுவதாகவும் குறிப்பிடப்படுகின்றதனைக் காணலாம். குறுந்தொகைப் பாடல் வேலனுக்கு **வெறியாடல்** செய்ததாகக் எடுத்துரைக்கிறது. இப் பாடல் வரிகளில் மருத நிலத்தில் வாழும் மக்கள் வேலனுக்கு வெறியாடல் நிகழும் களத்தினைப் பற்றிக் கூறும்பொழுது, செந்நெல்லின் வெள்ளிய பொரிகள் சிதறிக் கிடப்பது போல தோற்றம் பெற்று வெறியாடல் களம் இருப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது. இதனூடாக ஆடல் கலையும் இசைக் கலையும் இணைந்து வளர்ந்துள்ளதனைக் காணலாம். எடுத்துக்காட்டாக,

**நனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்**
**வேலன் புனைந்த வெறிஅயர் களத்தொறும்**
**செந்நெல் வான்பொரி சிதறி அன்ன**
**எக்கர் நண்ணிய எம்ஊர் வியன்துறை (குறுந்., பா. 53: 4)**

எனும் பாடலினைக் குறிப்பிடலாம்.

**சோதிடக் கலை**

குறிஞ்சி நில மக்களிடம் குறிகேட்கும் பழக்கம் காணப்படுவதன் மூலம் குறிசொல்லும் பெண்கள் காணப்பட்டமையும் புலனாகின்றது. இங்கு குறிசொல்லினையும் நாம் ஆற்றுக்கலைக்குள் உள்ளடக்கலாம். அத்துடன் இங்கு குறி சொல்பவர்கள் பாடல் மூலமாகவே

தமது கருத்துக்களை எடுத்துரைப்பதகால் இங்கு சோதிடக்கலையும், இசைக் கலையும் அங்கம் வகிப்பதனைக் காணலாம்.

**அகவன் மகளே அகவன் மகளே**
**மனவுக் கோப்பு அன்ன நல்நெடுங் கூந்தல்**
**அகவன் மகளே பாடுக பாட்டே**
**இன்னும் பாடுக பாட்டே அவர்**
**நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே (குறுந்., பா. 53: 5)**

இப்பாடலில் குறிஞ்சி நிலத்தில் உள்ள மக்கள் காட்டுவிச்சியிடம் குறிகேட்கும் பழக்கம் உடையவர்களாக இருந்துள்ளதை அறிய முடிவதுடன் காட்டுவிச்சியின் கூந்தலானது சங்குமணிகள் போல நீண்டு வெண்மைநிறம் உடையதாக இருக்கிறது. அதாவது குறிசொல்பவள் வயோதிபம் எய்தியவள் என்பதும் வெளிப்படுத்தப்படுகினறது.

**இசைக் கலை**

சங்க காலத்தில் மக்களுடைய வாழ்வுடன் இசை இரண்டறக் கலந்து காணப்பட்ட தன்மையினை காணமுடிவதுடன் அக்காலத்தில் இசை என்பது இசைவிப்பது, வசப்படுத்துவது எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. **(இந்து சமயநெறிகளும் கோயில் கலைகளும், பக். 38)** குறுந்தொகை இலக்கியத்தில் இசைக்கலை தொடர்பான சான்றுகளையும் காணமுடிகின்றது. எடுத்துக்காட்டாக, **“வரி வண்டுகளின் இசையினால் புதர்களில் உள்ள பூங்கொத்துக்கள் கட்டு நெகிழ்ந்து மகிழ்வது”** எனும் செய்தியினை குறுந்தொகை குறிப்பிடுகின்றது. அதேபோன்று குறிஞ்சி நில மகள் ஒருத்தி தனது நீண்ட கூந்தலை கையால் பெயர்த்துக் கோதிக்கொண்டு பெரிய மலையின் பக்கத்தே குறிஞ்சிப் பண்ணினை இசைக்கின்றாள். திணைக்கதிரினை தின்றுகொண்டிருந்த யானை ஒன்று அப்பாடலைக் கேட்டு, திணைக்கதிரினை உண்ணாது அவ்வாறே துயில்கொள்கின்றது. **(இந்து சமயநெறிகளும் கோயில் கலைகளும், பக். 38)** என குறிப்பிட்டு இசையானது யாரையும் வசப்படுத்தும் என்பதனை அகநாநூறு எடுத்துரைப்பதனையும் இங்கு நோக்கத்தக்கது.

சங்ககாலக் கலைஞர்களாகக் குறிக்கத்தக்கவர்களில் பாணர், பொருணர், விறலியர், கூத்தர், ஓவியர், சிற்பர், துடியர் ஆகியோர் நிலை ஆராய்தற்குரியது. பண் என்னும் சொல்லை முதன்மையாகக் கொண்ட பாணர்கள் பாடுவர், யாழிசைப்பர் என இரு வகைப்படுவர். இவர்களை யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் என வகுப்பர். அந்த வகையில் குறுந்தொகையில் பாணர்கள் பற்றிக் குறிப்பிடுகையில் தலைவன், தலைவிக்குப் பாணர் தூதாகச் சென்றுள்ளமையையும் காணமுடிகின்றது. எடுத்துக்காட்டாக, தலைவனிற்குத் தூதாகச் சென்ற பாணனை ஏற்றுக் கொண்ட தலைவி அவனைப் பற்றித் தன் தோழியிடம்,

**அன்னா யிவனோ ரிளமாணாக்கள்**
**தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ**

**இரந்தூ ணிரம்பா மேனியொடு**

**விருந்தினூரும் பெருஞ் செம்மனெ (குறுந்., பா. 33)**

இதில் தலைவி, தோழியைப் பார்த்து, தோழியே! இப் பாணன் ஓர் இழைய மாணாக்கன். தனது ஊரிலுள்ள பொதுவிடத்து எத்தகையவனோ? இரந்து பெறும் உணர்வினால் முற்ற வளராத மேனியோடு புதிதாகப் பெறும் விருந்தின் பொருட்டுச் செல்லும் பெரிய தலைமை உடையவன் என பாணனது நாவண்மையைப் புகழ்வதாக அமைந்துள்ளதனைக் காணலாம்.

குறுந்தொகையானது இசைக் கருவிகள் பற்றியும் எடுத்தியம்புகின்றது. தமிழர்களின் வாழ்க்கையோடு ஒன்றிய இசைக்கருவிகளாக யாழும், பறையும் விளங்குகின்றன. இவை ஒவ்வொரு நிலத்திற்குரிய கருப்பொருளாகவும் ஓதபடுகின்றது. பிற்காலத்திலேயே பறை இழவுக் கருவியாகின்றது. நெய்தற் பறை மட்டுமே சாக்காட்டுப் பறையாகும்.

**பறைபடப் பணில மார்ப்ப இறை கொள்பு**

**தொன் மீதாலத்துப் பொதியில் தோன்றிய**

**...சேயிலை வெள்வேல் விடலையொடு**

**தொகுவளை முன்கை மடந்தை நட்பே (குறுந்., பா. 15)**

இதில் பறையானது திருமண நிகழ்வின் போது இசைக்கப்படும் கருவியாகக் குறிப்பிடப்படுகின்றது.

**ஒப்பனைக் கலை**

குறுந்தொகையில் மலர் சூட்டுதல், மலர் அலங்காரக் கலை தொடர்பாக எடுத்துரைக்கப்படுகின்றது. தமிழர்கள் வாழ்வில் மலர்கள் சீரிய இடம் பெற்றுள்ளன. தார், மாலை, கண்ணி எனும் மூவகை மாலைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. மகளிர் தம் கூந்தலை நெய்யும் மயிர்ச்சாந்தும் பூசி மணப்படுத்துவர் என்பதனை குறுந்தொகை எடுத்துரைக்கின்றது. குறுந்தொகையில் மலர் சூட்டுதல் பற்றியும் மலர் அலங்காரம் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டுள்ளதனைக் காணலாம். அத்துடன்,

**புனவன் துடவைப் பொன்போற் சிறுதினைக்**

**...சூர்மலை நாடன் கேண்மை**

**நீர்மலி கண்ணொடு நினைப்பா கின்றே (குறுந்., பா. 105)**

விறலியர்கள் யாழ் வாசித்தால் நயமுண்டாகி நடனமாடுவர் என்றும் குறிப்பிடப்பஅத்துடன், விறலியர்கள் தமது ஆடல் நிகழ்வின் போது வர்ணம் பூசப்பட்ட வளைந்த சந்தினையுடைய முன் கைகளையும் ஒளி பொருந்திய நெற்றியினையும் உடையவர்கள் என கோவூர்க்கிரால் குறிப்பிடுவான் மூலம் விறலியர்கள் ஆடல் நிகழ்வின் போது ஒப்பனைகளினையும் மேற்கொள்வது புலனாகின்றது.

**கூத்துக்கலை**

துணங்கை என்பது ஒரு வகை கூத்துக் கலையாகும். இது முடங்கிய இரு கைகளையும்

விலாப்புடைகளை ஒற்றி அடித்துக்கொண்டு அசைந்தாடும் ஒருவகைக் கூத்தாகும். மகளிர் விழாக்காலங்களில் துணங்கைக் கூத்தாடுவர். ஆடவர் அம் மகளிருக்கு முதற்கை கொடுத்தல் வழக்கம். நானிலங்களிலும் இருந்த வள்ளல்கள்பாற் சென்று உள்ளக்குறிப்புப் புறத்து வெளிப்பட ஆடிய நடனமங்கை பண்டைத் தமிழகத்தில் விறலி என அழைக்கப்பட்டாள். இவ் விறலியர்கள் கூத்தருடனும் பாணருடனும் சென்று வள்ளல்களிடம் பரிசில் பெற்று வந்தனர். அவர்கள் பெரும்பாலும் பாணருடனேயே சென்றனர். **“விறலியர்”** எனப்படுபவர்களை **“ஆடும் மகளிர்”** எனவும் குறிப்பிடுவர். இதனூடாக நடனக் கலையும் வளர்ச்சிபெற்று வந்துள்ளது எனபது புலனாகிறது. எடுத்துக்காட்டாக,

**புனவன் துடவைப் பொன்போற் சிறுதினைக்**
**கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல்**
**அறியா துண்ட மஞ்ஞை ஆடுமகள்**
**வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்**
**சூர்மலை நாடன் கேண்மை**
**நீர்மலி கண்ணொடு நினைப்பா கின்றே (குறுந்., பா. 105)**

அத்துடன் மன்னர்களின் சபைகளில் ஆடல் வழங்கிய விறலியர்களிற்கு பொன்னரி மாலைகள், தொடி முதலிய ஆபரணங்கள் பரிசாக வழங்கப்பட்டமையினையும் அறிய முடிகின்றது. அத்துடன் விறலியர்கள் யாழ் வாசித்தால் நயமுண்டாகி நடனமாடுவர் என்றும் குறிப்பிடப்படுகின்றது. விறலியர்கள் தமது ஆடல் நிகழ்வின் போது வர்ணம் பூசப்பட்ட வளைந்த சந்தினையுடைய முன் கைகளையும் ஒளி பொருந்திய நெற்றியினையும் உடையவர்கள் என கோவூர்க்கிரால் குறிப்பிடுவான் மூலம் விறலியர்கள் ஆடல் நிகழ்வின் போது ஒப்பனைகளினையும் மேற்கொள்வது புலனாகின்றது. இதனூடாக இசைக்கலை, நடனக்கலை, ஆபரணம் செய்யும் முறை (வார்ப்புக் கலை அல்லது செதுக்கு கலை) என்பன பற்றி எடுத்துரைக்கின்றதனைக் காணலாம். குறவனுடைய தோட்டத்தில் விளைந்த, பொன்னைப் போன்ற சிறு தினையின் வளமான கதிர், புதியதை உண்ணும் தெய்வத்துக்குப் படைப்பதற்காக வைக்கப்பட்டிருந்தது. அதைத் தெரியாமல் உண்ட மயில், தன் தவறை உணர்ந்தவுடன், வெறியாட்டம் ஆடும் பெண் அழகாக ஆடுவதைப்போல் ஆடி வெப்பமுற்று நடுங்கும். அத்தகைய அச்சம்தரும் தெய்வம் வாழும் மலை நாடனோடு நான் கொண்ட நட்பு, எனக்கு நீர் நிறைந்த கண்களோடு அதை நினைத்து நான் துன்புறுவதற்குக் காரணமாகியது என பின்வரும் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளதனைக் காணலாம். இப்பாடல் ஊடாக வெறியாடல் நிகழ்வு பற்றியும், அதனை ஆடும் பெண்ணின் அழகிய தோற்றமும் நேர்த்தியான ஆட்டத்தினையும் எடுத்துரைப்பதன் மூலம் ஆடல் கலை தொடர்பாக அறிய முடிகின்றது.

**கட்டடக்கலை**

கட்டடக்கலை பற்றி குறுந்தொகையில் சிறப்பாக எடுத்துரைக்கப்படுகின்றனர்.

தலைவன் தலைவியைவிட்டுப் பிரிந்து செல்லும் நிலையில் இருக்கிறான். தலைவியையும் உடனழைத்துச் செல்லுமாறு தோழி கூறுகிறாள். **“நான் செல்லும் வழி கொடுமையானது”,** என்று கூறித் தலைவியை அழைத்துப் போகத் தலைவன் தயங்குகிறான். அதைக் கேட்ட தோழி, **“உன்னைவிட்டுப் பிரிந்திருந்தால் தலைவிக்கு வீடு இனிமையானதாகுமோ?”** என்று தோழி கேட்கிறாள். இங்கு **வீடு** கட்டடக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக குறிப்பிடலாம். அத்துடன் வீடு கட்டப்பட்டு மக்கள் சிறப்புடன் வாழ்ந்தமையும் தெளிவாகின்றது. இதனை,

**உமணர் சேர்ந்து கழிந்து மருங்கி னகன்றலை**
**ஊர்பாழ்த் தன்ன ஓமையம் பெருங்காடு**
**இன்னா என்றி ராயின்**
**இனியவோ பெரும தமியோர்க்கு மனையே (குறுந்., பா. 124)**

எனும் பாடலில், தலைவ! உப்பு வணிகர்களான உமணர்கள் கூட்டமாகத் தங்கியிருந்து, பிறகு அங்கிருந்து அகன்று சென்ற அகன்ற இடம் பாழான ஊர்போல் தோன்றும். அதுபோல் தோற்றமளிக்கும் ஓமை மரங்கள் நிறைந்த பெரிய காடுகள் உள்ளன. அந்த வழி மிகவும் கொடுமையானது என்று நீங்கள் கூறுகின்றீர் எனில், உங்களைவிட்டு வீட்டில் தனியாக இருந்தால், தலைவிக்கு வீடு இனிமையானதாக இருக்குமோ? என்று கட்டடக்கலையினைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றார். அதனைத் தொடர்ந்து,

**காதல ருழைய ராகப் பெரிதுவந்த**
**சாறுகொ ளூரிற் புகல்வேன் மன்ற**
**அத்த நண்ணிய வங்குடிச் சீறூர்**
**மக்கள் போகிய வணிலாடு முன்றிற்**
**புலப்பில் போலப் புல்லென்**
**றலப்பென் றோழியவ ரகன்ற ஞான்றே (குறுந்., பா. 41)**

எனும் பாடலில், தலைவர் பக்கத்தில் இருந்தால் மிக மகிழ்ச்சியுற்று, விழா கொண்டாடும் ஊரிலுள்ளோர் மகிழ்வதைப் போல நிச்சயமாக மகிழ்வேன். அவர் என்னை பிரிந்து மகிழ்ச்சியுற்று, பாலை நிலத்தில் பொருந்திய அழகிய குடியுடைய சிறிய ஊரில் மனிதர்கள் நீங்கிச் சென்றதும் அணில் விளையாடுகின்ற முற்றத்தையுடைய தனிமையுள்ள வீட்டைப் போல பொலிவிழந்து வருந்துவேன் என்று பொருள்படும் படி அமைந்த பாடலில் வீட்டின் அமைப்பு, முற்றம், முற்றத்தில் பிராணிகள் விளையாடும் அளவிற்கு விசாலமான முற்றத்தின் அமைப்பு என்பன பற்றிச் சிறப்பாக எடுத்துரைக்கப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து, வாடிய ஆம்பல் மலரைப் போன்ற குவிந்த சிறகுகளையுடைய வீடுகளில் காணப்படும் குருவிகள், முற்றத்தில் உலரும் தானியங்களைத் தின்று, பொது இடத்தில் கானும் எருவுன் நுண்ணிய பொடியைக் குடந்து விளையாடி வீட்டிலுள்ள பிறையில் தனது குஞ்சுகளுடன் தங்கியிருக்கும். பிரிந்தாருக்குத் துன்பத்தைத் தரும் மாலைக் காலமும், தனிமையும் அத்தலைவர் பிரிந்து சென்ற

நாட்டிலும் இல்லையோ? எனக் குறிப்பிட்டு வீட்டுக் கூரை மற்றும் வீட்டிக் பிறை தொடர்பாக எடுத்துக்கூறப்பட்டுள்ளதனைச் சிறப்பாக பின்வரும் பாடலில் காணலாம்.

**ஆம்பற் பூவின் சாம்ப லன்ன**
**கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ**
**முன்றி லுணங்கன் மாந்தி மன்றத்**
**தெருவினுண் டாது குடைவன வாடி**
**இல்லிறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்**
**புன்கண் மாலையும் புலம்பும்**
**இன்றுகொ றோழியவர் சென்ற நாட்டே (குறுந்., பா. 46)**

குறுந்தொகையில் கட்டடக்கலையின் மற்றொரு எடுத்துக்காட்டினை விளக்கும் வகையில், திருமணத்திற்குப் பொருள் தேடுவதற்காகச் சென்ற தலைவன், தான் தேடிச் சென்ற பொருளைப் பெற்றுத் திரும்பிவருகிறான். வரும் வழியில் தலைவியின் ஊர் அவன் கண்களில் தெரிகின்றது. அவன் கார்காலத்தில் திரும்பிவருவதாகக் கூறிச் சென்றான். ஆனால், இப்பொழுது கார்காலம் முடிந்து குளிர்காலம் வந்தது. குளிர்காலம் வந்ததால் வாடைக்கற்று வீசுகிறது. தன்னைப் பிரிந்திருக்கும் தலைவி, வாடைக் காற்றினால் வருந்துவாள் என்பது அவனுக்கு நினைவுக்கு வருகிறது. ஆகவே, **“என் தலைவியை வருத்தாமல் பாதுகாப்பாயாக”** என்று வடைக்காற்றை வேண்டுகிறான். இப்பாடலைத் தலைவன் தேர்ப்பாகனுக்கு உரைத்ததாகக் கருதாமல், வாடைக் காற்றை நோக்கிக் கூறியதாகக் கருதுவது பொருத்தமானதாகத் தோன்றுகிறது. வாடைக் காற்றே! நெல்லிக்காயை, மரை என்னும் மானினம் உண்ணுகின்ற முற்றத்தை உடைய, புல்லால் வேயப்பட்ட குடிசைகளை உடைய, நல்ல தலைவியின் ஊர்பா, ரித்த தோல் தொங்குவதைப் போல் விழும் தூய வெண்மையான அருவியை உடைய, மலை உச்சிக்கு அருகில் உள்ளது. அங்கே உள்ள என் தலைவியை நீ பாதுகாப்பாயாக! நீ வாழ்வாயாக! என்று குறிப்பிடுவதனைக் காணலாம். இதனைப் பின்வரும் பாடலில்,

**ஓம்புமதி வாழியோ வாடை பாம்பின்**
**தூங்குதோல் கடுக்குந் தூவெள் ளருவிக்**
**கல்லுயர் நண்ணி யதுவே நெல்லி**
**மரையின மாரு முன்றிற்**
**புல்வேய் குரம்பை நல்லோ ளூரே. (குறுந்., பா. 235)**

எனும் பாடலில் குடிசை புல்லால் வேயப்பட்டது என்றும், முற்றத்தினைப் பற்றியும் சிறப்பாக எடுத்துரைப்பதனைக் காணலாம்.

**சமையற்கலை**

குறுந்தொகை இலக்கியத்தில் சமையற்கலை பற்றிச் சிறப்பாக எடுத்துரைக்கப்படுகின்றது. சங்க கால மக்கள் இல்லறத்தை நல்லறமாகப் போற்றிப் பேணி

வந்தமையை பல்வேறு பாடல்கள் மூலம் உணரமுடிகிறது. புதிதாகத் திருமணம் புரிந்த தலைவனும், தலைவியும் இல்லற வாழ்வை இனிதே துவக்குகிறார்கள். தலைவி செல்வர் வீட்டில் பிறந்து செழிப்புடன் வளர்ந்தவள். சமைத்தறியாதவள் இருப்பினும் தன் கையால் தலைவனுக்கு சமைத்துத் தர ஆவல் கொண்டாள். அதன் பொருட்டு தயிர்க் குழம்பைத் தயார் செய்கிறாள். தோய்ந்த கட்டித் தயிரைக் கையாற் பிசைந்து கையைக் கழுவாமல் அப்படியே தன் தூய ஆடையில் துடைத்துக் கொண்டாள். குழம்பைத் தாளிக்கும் போது ஏற்ப்பட்ட புகை அவளது மையுண்ட கண்களை கலங்கச் செய்தது. இவ்வாறு அவள் அன்புடன் செய்த குழம்பைக் கணவனுக்கு இட்டாள். அவன் அது மிகவும் இனிதாக உள்ளதாகப் பாராட்டி மகிழ்ந்து உண்கிறான் அவள் முகம் மகிழ்ச்சியால் மலர்கிறது.

**முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ,**
**குவளை உன்கண் குய்ப்புகை கமழக்**
**தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்**
**இனிதெனக் கணவன் உண்டலின்**
**நுண்ணிதன் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே (குறுந்., பா. 167)**

இந்நிகழ்வின் மூலம் பெண்களின் சமையற்கலை எடுத்துரைக்கப்படுவதனைக் காணலாம். அத்துடன், தயிர், பால், நெய், கிழங்கு, கீரை என்பனவும் மக்களது அன்றாட வாழ்வில் முக்கியம் பெற்றுள்ளமையினைக் குறுந்தொகையின் ஊடாகக் காணமுடிகின்றது.

**தொகுப்புரை**

எட்டுத்தொகையுள் அடக்கமான குறுந்தொகையில் கலைகள் பற்றிய சான்றுகள் இழையோடியிருப்பதனை மேற் குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் மூலம் உறுதிப்படுத்த முடிகின்றது. அந்தவகையில் இங்கு இசைக் கலை, ஆடல்கலை, சோதிடக் கலை (ஆரூடம்), கூத்துக்கலை, சமையல் கலை, ஒப்பனைக் கலை, அலங்காரம், கட்டடக்கலை என்பன பற்றிய சான்றுகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளமையானது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இக்கலைகள் மக்களது வாழ்வின் ஒவ்வாரு செயற்பாடுகளிலும் பின்னிப்பிணைந்து காணப்பட்டுள்ளமையினை கவிஞர்களது பாடல் வரிகளே எமக்கு உணர்த்துவதும் கண்கூடு. குறுந்தொகை இலக்கியமானது ஐவகை நிலங்களிற்குமுரிய ஒழுக்கத்தினையும் தலைவன், தலைவியினரிற்கிடையிலான புரிந்துணர்வு, பிரிவு, ஏக்கம், காதலர்கள் அல்லது கணவன் மனைவிக்கு இடையிலான தூது, இல்வாழ்க்கை போன்ற இன்னோரன்ன விடையங்களை எடுத்துரைக்கின்றது. இருப்பினும் ஆங்காங்கே கலைகள் தொடர்பான சான்றுகளையும் எமக்களிக்கத் தவறவில்லை. 400 பாடல்களில் கலைகளினை பற்றி நேரடியாகக் கூறாவிடினும் இலைமறை காய்களாக பாடல்களில் தொக்கி நிற்கும் விடையங்கள் ஊடாகவும், மக்களது

பழக்க வழக்கங்கள், சடங்குகள், அன்றாட கடமைகள், வழிபாட்டு முறைகள் என்பன ஊடாக கலைகள் பற்றிய சான்றுகளை எமக்கு எடுத்துரைத்திருப்பதனைக் காணலாம்.

**உசாத்துணை**

[1] நாகராசன், வி. *குறுந்தொகை.* நியூ செஞ்சூரி புத்தக நிலையம், சென்னை, 2004.

[2] பாலசுப்ரமணியன்., கு.வெ. *சங்க இலக்கியத்தில் கலையும் கலைக்கோட்பாடும்.* நியூ செஞ்சூரி புக்ஹவுஸ், சென்னை, 2016.

[3] கேசவன், எஸ். *இந்து சமயநெறிகளும் கோயில் கலைகளும்.* மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் சங்கம், மாவட்டச் செயலகம் (கச்சேரி), மட்டக்களப்பு.

[4] கேசவன், எஸ். *இந்து நாகரிகம் ஓர் அறிமுகம்.* குமரன் புத்தக இல்லம், கொழும்பு, சென்னை, 2021.

[5] மணிகண்டன். ப, உதவிப் பேராசிரியர், இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி, கோவை-28.

[6] லண்டன் சுவாமிநாதன், ஆராய்ச்சிக் கட்டுரை எண் – 1449, திகதி – 1.12.2014.

[7] www.blogerspot.com , இராதாகிருஷ்ணன்.T.V, time – 06:23 pm.

[8] www.nallakurunthokai.blogersport.com , பிரபாகரன், time – 01:26 pm.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.